II ADJ COURT, TRICHY

DEPOSITION OF WITNESS

**In the Court of II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No :84/2024**

**Present – S.Gopinathan, B.Sc.,B.L.,**
**II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness -2 (LW -2)
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **திரு.செந்தில்குமார்** | Caste | : | |
| Father Name | : | **திரு.பாலன்** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **10.08.2026.**

**PW -2 (LW -2 )**

**(2, 3, 7, 8** எதிரிகள் ஆஜர்**. 1, 4, 6** எதிரிகள் ஆஜர் இல்லை**.** பிரிவு **355** பிஎன்எஸ்எஸ் மனு அனுமதி**.** அனைத்து எதிரிகளுக்காகவும் வழக்கறிஞர்கள் ஆஜர் ஆனார்கள்**.) (**சாட்சி அவருடைய ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலிசார் மூலம் அடையாளம் காணப்பட்டார்**.)**

**முதல் விசாரணை:**

நான் திருச்சி கல்கண்டார் கோட்டை பகுதியில் குடியிருந்து வருகிறேன். ஆசாரி வேலை செய்கிறேன். அ.சா.1 சந்திரசேகர் என் நண்பர். கோபி கண்ணனும் எனது நண்பர். கோபி கண்ணன் வழக்கறிஞர் தொழில் செய்தார். கோபி கண்ணன் இறந்துவிட்டார் என்று 09.05.2021 அன்று வந்தது. தொலைபேசி மூலம் தகவல் வந்தது. அவரை வெட்டி விட்டார்கள் என்று சொன்னார்கள்.

(மேற்படி சாட்சி போலீஸ் விசாரணையில் ஒருவிதமாகவும் நீதிமன்ற விசாரணையில் வேறு விதமாகவும் சாட்சியமளித்திருப்பதால் ஆவணங்களின் அடிப்படையில் பார்த்து அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை அரசு

தரப்பில் பிறழ்சாட்சியாக அனுமதி கேட்கப்பட்டது. அது சம்பந்தமாக வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. **மேற்படி சாட்சி அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு, அனுமதிக்கப்படுகிறது)**

**அ.த.கு.வி:**

கடந்த 09.05.2021-ம் தேதி மாலை சுமார் 06.45 மணிக்கு நீங்களும், அ.சா.1 சந்திரசேகரும் அவருடைய தம்பி கோபி கண்ணனை பார்ப்பதற்காக நீங்கள் சென்ற பொழுது கீபர் ரோட்டில் கோபி கண்ணனின் சத்தம் கேட்டு இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள் கோபி கண்ணனை வழி மறித்து சராமாரியாக வெட்டி விட்டு அதே வண்டியில் தப்பி ஓடியதை நான் கண்ணால் பார்த்து விட்டு அது சம்பந்தமாக அ.சா.1 உடன் போலீஸ் நிலையம் சென்றும், போலீசார் விசாரணையில் அது சம்பந்தமாக வாக்குமூலம் கொடுத்து விட்டு எதிரிகளை காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் மற்றும் வேறு விதமாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னாலும், சம்பவத்தை பார்க்கவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றாலும் சரியல்ல.

உங்களை போலீசார் திருச்சி மத்திய சிறைக்கு அழைத்து சென்றார்களா ஆம். அப்பொழுது உங்களுடன் சந்திர சேகரும் வந்தாரா என்றால் சரிதான். போலீசார் நீதிமன்ற அழைப்பாணையை அது சம்பந்தமாக சார்பு செய்தார்களா என்றால் செய்தார்கள். அப்பொழுது திருச்சி கூடுதல் மகிளா நீதிமன்ற நீதிபதி இருந்தார். அப்பொழுது இறந்து போன கோபி கண்ணனை யார் வெட்டினார்கள் என்று நீதிபதி முன்பு எதிரிகள் 1, 2, 3, 4, 6 ஆகியோர்களை அடையாளம் காட்டினீர்களா என்றால் சரிதான். அதன் தேதி 28.05.2021 என்றால் சரிதான்.

நீதிபதி உங்களிடம் அடையாள அணிவகுப்பிற்கு பின்பு படித்து காண்பித்து கையெழுத்து பெற்றார் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். கோபி கண்ணனுக்கு இரண்டு குழந்தைகள்.

HIGH COURT OF JUDICATURE

மூத்த பெண் குழந்தையின் பெயர் சஸ்திகா. இரண்டாவது மகள் பெயர் ஜெகதாஸ்ரீ. அவருடைய மனைவி பெயர் போதேஸ். அ.சா.1–ன் மனைவியின் பெயர் சாந்தி.

பால விநாயகர் கோவில் கீழபுதூரில் உள்ளது. நீதிமன்றத்தில் இருந்து பீமநகர் ரிலையன்ஸ் மற்றும் செசன்ஸ் காவல் நிலையத்தை கடந்து செல்லும் பாலக்கரை செல்லும் பாதை வழியாகத்தான் போக முடியும். தெரு பெயர் தெரியாது. பால விநாயகர் கோவில் திருவிழா சம்பந்தமாக ஹேமந்த் குமாருக்கும், கோபி கண்ணனுக்கும் பிரச்சனை இருந்தது.

1–வது எதிரி பெயர் பிரஜேஸ், மற்ற எதிரிகள் பெயர் தெரியாது. 2021–ல் பிரஜேஸ் எங்கு குடியிருந்தார் என்று எனக்கு தெரியாது. ஹேமந்த்குமார் என்பவர் பிரஜேஸ் என்பவரின் தம்பி. கீழபுதூரில் இருக்கும் பொழுது கோபி கண்ணனுக்கும், பிரஜேஸ்க்கும் முன் விரோதம் இருந்தது. இரு தரப்பினருக்கும் பிரச்சனை ஏற்பட்டு பிரஜேஸ் என்பவரும், கோபி கண்ணனும் அந்த ஊரை விட்டு வெளியேறிவிட்டார்கள் என்றால் சரிதான்.

கோபி கண்ணன் ஊரை விட்டு காலி செய்த பிறகும் நான் கோபி கண்ணனிடம் நல்லது கெட்டதை எடுத்து சொல்வேன் என்றால் சரிதான். (எதிரிகள் தரப்பில் கடும் ஆட்சேபனை செய்யப்பட்டது பதிவு செய்யப்படுகிறது) கோபி கண்ணனை கொலை செய்த இடமும் எனக்கு தெரியும். கோபி கண்ணன் இறந்த சமயம் நீங்களும், சந்திரசேகரும் அந்த இடத்தில் இருந்தீர்கள் என்றாலும், சம்பவத்தை நீங்கள் இருவரும் நேரில் பார்த்தீர்கள் என்றாலும், அது சம்பந்தமாக போலீசில் வாக்குமூலம் கொடுத்துள்ளீர்கள் என்றாலும், அடையாள அணி வகுப்பிலும் கலந்து கொண்டீர்கள் என்றாலும் சரியல்ல.

தற்பொழுது நீதித்துறை நடுவர் தாக்கல் செய்த அடையாள அணிவகுப்பில் உத்தரவை தெரிந்து கொண்டு நீங்கள் செய்த கையெழுத்து இது தான் என்றால் சரிதான். அது **அ.த.சா.ஆ.2** ஆகும்.

II ADJ COURT, TRICHY

**<u>எ.த.கு.வி</u>** :

| | |
|---|---|
| **கேள்வி** | அடையாள அணி வகுப்பிற்கு உங்களுக்கு சம்மன் எப்பொழுது உங்களுக்கு கொடுத்தார்கள்? |
| **பதில்** | அடையாள அணி வகுப்பு நடப்பதற்கு 3 நாட்களுக்கு முன்பு. |
| **கேள்வி** | அடையாள அணி வகுப்பு நடப்பதற்கு முன்பு நீதிபதி உங்களிடம் கேட்டு பதிவு செய்யும் பொழுது போட்டோ எதுவும் காண்பித்தார்களா? |
| **பதில்** | ஆம். போலீசார் காண்பித்தார்கள். நீதிபதி காண்பிக்கவில்லை. |

**ம.எ.த.கு.வி.** மேற்படி குறுக்கு விசாரணை ஏற்று கொள்ளப்பட்டது.

**<u>மறுவிசாரணை</u> :** இல்லை.

திறந்த வெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 10.08.2026 என் முன்பு கையெழுத்து செய்தார்.

Sd/.Thiru.S.Gopinathan,

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

தேதி: 10.08.2026